1323. $\frac{(0.673)\times(0.673)-(0.327)\times(0.327)}{1-0.654}$

A) 0.276 B) 0.354 C) 0.412 D) 1.000

(Group – I – DC12 – 2013)

1324. பின்வருவனவற்றை சுருக்குக : $\frac{x^2+1}{x^4-1}$

A) $\frac{1}{x^2}$ B) $\frac{1}{x^2-1}$ C) x^2 D) $\frac{1}{x^2+1}$

(Group – I – DC12 – 2013)

1325. x இனது 2% 40 எனில், $(x+50)$ அது 2% =

A) 50 B) 401 C) 410 D) 41

(Group – I – DC12 – 2013)

1326. ஓர் இரு சக்கர ஊர்தியின் குறித்த விலை ₹ 17,000 அந்த நிறுவனம் ₹ 1700 தள்ளுபடி அளித்திடின் அந்த வண்டிக்கு அளித்த தள்ளுபடி சதவீதம் என்ன?

A) 15% B) 25% C) 5% D) 10%

(Group – I – DC12 – 2013)

1327. ஆங்கிலத்தில் 300 மாணவர்களின் சராசரி மதிப்பெண் 45 முதல் 100 மற்றும் கடைசி 100 மாணவர்களின் சராசரி மதிப்பெண் 70 மற்றும் 20 முறையே பாக்கியுள்ள 100 மாணவர்களின் சராசரி மதிப்பெண் ஆனது

A) 70 B) 20 C) 45 D) 50

(Group – I – DC12 – 2013)

1328. நிகழ்வுப் பட்டியலில் பிரிவுகளின் எண்ணிக்கை (K) 'ஸ்டர்ஸ்' விதிகளின் கீழ் உறுதி செய்வது

A) $K=1+3.32\log_{10}N$ B) $K=1-3.32\log_{10}N$

C) $K=1+2.32\log_{10}N$ D) $K=1+3.32\log_{e}N$

(Group – I – DC12 – 2013)

1329. கிரிக்கெட்: மட்டை எனில், போலோ : ____?____

A) ருச்சி B) மரச்செம்மட்டி

C) தடி D) ஈட்டி

(Group – I – DC12 – 2013)

1330. விடுப்பட்ட எழுத்தை கண்டுபிடி.



A) R B) S C) T D) W

(Group – I – DC12 – 2013)

1331. ஒவ்வொரு எழுத்தும் வெவ்வேறு இலக்கு எனில், A-ன் மதிப்பு யாது?

(A3B)(B) = 217B

A) 3 B) 4 C) 5 D) 7

(Group – I – DC12 – 2013)

1332. பகடை இரண்டு முறை சுழற்றப்படுகின்றது. கூட்டு எண் 9 பெறுவதற்கான நிகழ்தகவு காண்க.

A) 9 B) $\frac{1}{9}$ C) $\frac{2}{9}$ D) $\frac{9}{2}$

(Group – I – DC12 – 2013)

1333. இரண்டு பகடை எரியப்படுகின்றது. கூட்டு எண் 7 அல்லது 11 இல்லாததற்கான நிகழ்தகவு என்ன?

A) 7/9 B) 9/7 C) 4/7 D) 1/9

(Group – I – DC12 – 2013)

1334. வருவாய் மூலம் செய்த செலவினங்களை வட்ட விளக்க படத்தில் விவரிக்கப்பட்டுள்ளது. நோய் தடுப்புக்கு செய்த வருவாய் செலவின் சதவீதம் ஆனது



A) 40% B) 30%

C) 20% D) 10%

(TNPSC A.E – 2013)

1335. S என்ற கணம் n உறுப்புகளைப் பெற்றிருப்பின், S-ன் வெற்றற்ற தகு உட்கணங்களின் எண்ணிக்கை

A) 2^n B) n^2

C) 2^n-1 D) 2^n-2

(TNPSC A.E – 2013)

1336. ஒரு தொகை கூட்டு வட்டியில் 3 வருடத்தில் ரூ.800 ஆகவும், 4 வருடத்தில் ரூ.840 ஆகவும் உயர்கிறது எனில், ஒரு வருடத்திய வட்டி வீதம்

A) 2½% B) 4%

C) 5% D) $6\frac{2}{3}$%

(TNPSC A.E – 2013)

1323 ... D 1324 .... B 1325 ..... D 1326 .... D 1327 ...... C 1328 ..... A 1329 ..... B 1330 .... C 1331 ..... B 1332 ..... B
1333 .... A 1334 .... B 1335 ..... D 1336 C

1337. ஒரு விரைவு வண்டி 100 கி.மீ/மணி சராசரி வேகத்துடன், ஒவ்வொரு 75 கி.மீ. க்கும் 3 நிமிடம் நின்று பயணிக்கிறது. புறப்படும் இடத்தில் இருந்து 600 கி.மீ தூரத்தில் உள்ள இடத்தை அடைய எவ்வளவு நேரம் எடுக்கும்?

A) 6 மணி 24 நி B) 6 மணி 27 நி
C) 6 மணி 21 நி D) 6 மணி 30 நி

(TNPSC A.E – 2013)

1338. A, B குழாய்கள் ஒரு தொட்டியை முறையே 5 மணி நேரம், 6 மணி நேரத்தில் நிரப்புகின்றன. குழாய் C அத்தொட்டியை 12 மணி நேரத்தில் காலி செய்கிறது. 3 குழாய்களும், ஒரே நேரத்தில் திறக்கப்பட்டால், தொட்டி நிரம்பும் நேரம்

A) $1\frac{13}{17}$ மணி நேரம் B) $2\frac{8}{11}$ மணி நேரம்
C) $3\frac{9}{17}$ மணி நேரம் D) $4\frac{1}{2}$ மணி நேரம்

(TNPSC A.E – 2013)

1339. இரண்டு இலக்கு உள்ள இரட்டைப் படை கூட்டு எண் காண்க.

A) 2475 B) 2430
C) 4905 D) 1215

(TNPSC A.E – 2013)

1340. விடுபட்ட எண் காண்க.



A) 18 B) 20
C) 19 D) 9

(TNPSC A.E – 2013)

1341. விடுபட்ட எண் காண்க :

5	9
14	4
18	10
28	8
36	20
56	?

A) 15 B) 46
C) 16 D) 17

(TNPSC A.E – 2013)

1342. விவரத்தின் துல்லியம் மற்றும் உறுதிநிலை சரியென்று நிரூபித்துக் காட்டக் கூடியது.

A) அகவிசை சரிபார்த்தல்
B) புறவிசை சரிபார்த்தல்
C) ஆழ்ந்த சோதனை
D) (அ) மற்றும் (B) இரண்டும்

(TNPSC A.E – 2013)

1343. ஓர் பிரிவு மாணவர்களின் மதிப்பெண் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

©v ¨ ö £ s	: < 10	< 20	<30	< 40	< 50
மாணவர்களின் எண்ணிக்கை :	15	38	65	84	100

எத்தனை மாணவர்கள் 30-க்கு மேல் மதிப்பெண் எடுப்பார்கள்?

A) 65 B) 50
C) 35 D) 43

(TNPSC A.E – 2013)

1344. ராஜ்-யை விட காமேஷ் உயரமானவர். ஆனால் சோமேஷ் போன்று உயரமானவரல்லர். ராஜீவை விட சோமேஷ் குள்ளமானவர். ஆனால் ராஜீவ் சுபாஷைவிட உயரமானவர் அல்லர் எனில், அவர்களை உயரப்படி நிறுத்தினால் நடுவில் இல்லோர்.

A) காமேஷ் B) ராஜ்
C) ராஜீவ் D) சோமேஷ்

(TNPSC A.E – 2013)

1345. ஒரு செவ்வகத்தின் நீளம் 10% அதிகரிக்கப் படுகிறது மற்றும் அதன் அகலம் 10% குறைக்கப் படுகிறது எனில், புதிய செவ்வகத்தின் பரப்பளவு

A) மாறாமலிருக்கும் B) 1% அதிகரிக்கும்
C) 10% குறையும் D) 1% குறையும்

(TNPSC A.E – 2013)

1346. விடைப் பகுதியில் கொடுக்கப்பட்டுள்ள எப்படம் பின்வரும் படத்தை முழுமையாக்கும்.



A) B)

C) D)

(TNPSC A.E – 2013)

1337 ....C 1338 ....C 1339 .....B 1340 .... C 1341 ......C 1342 .....C 1343 ..... C 1344 .... D 1345 .... D 1346 ..... A

1347. ஓர் ஸ்தாபனம் ₹ 75 கோடி மொத்த லாபம் ஈட்டியது. அதில் வரி ₹ 15 கோடி அரசாங்கத்திற்கு செலுத்தியது மற்றும் பங்குதாரர்களுக்கு இலாப ஈவு ₹ 45 கோடி வழங்கியது எனில், நிறுத்தி வைத்துள்ள இலாப சதவீதம்

A) 50% B) 40%
C) 30% D) 20%

(TNPSC A.E - 2013)

1348. நோயாளியின் நோய் சிதைவு பற்றிய விவரங்கள் நல மையத்தினரால் பார்வையிட்டது கொடுக்கப்பட்டுள்ளது.

நோய் :	நீரழிவு	கொழுப்பு சத்து	அதிக இரத்த அழுத்தம்	இதர
நபர்களின் எண்ணிக்கை	120	36	44	40

கொழுப்பு சத்து உள்ள நோயாளியின் சதவீதமானது

A) 36% B) 44%
C) 15% D) 10%

(TNPSC A.E - 2013)

1349. வீச்சு நம்பிக்கை அற்ற அளவு மாறுபாடு ஏன் என்றால்

A) வீச்சானது எளிதில் கணக்கிடக் கூடியது
B) வீச்சு எதிர்மறை ஆகாது
C) 50% சதவீத விவரங்கள் தவிர்க்கும்
D) வீச்சானது இரண்டு கண்டறிந்த தரவு மட்டும் கருதும்

(TNPSC A.E - 2013)

1350. அதிக பொதுவான வரைவிளக்கத்தின் குலம் நிகழ்வெண் பரவலானது

A) வளர் நிகழ் வரை
B) செவ்வகப் படம்
C) நிகழ்வெண் பலகோணம்
D) எதுவுமில்லை

(TNPSC A.E - 2013)

1351. கீழே உள்ள விவரங்களுக்கு, 250 மற்றும் 300க்கு இடையே உள்ள கண்டறி பதிவு எண்ணிக்கை காண்க.

மதிப்பு :	> 200	> 250	> 300	> 350
எண்ணிக்கை :	56	38	15	0

A) 56 B) 23
C) 15 D) 8

(TNPSC A.E - 2013)

1352. எந்த வரைபடத்தின் மூலம் முகடைக் கண்டு பிடிக்கலாம்?

A) வளர் நிகழ்வரை
B) நிகழ்வெண் பலகோணம்
C) பரவல் செவ்வகப் படம்
D) இவற்றுள் எதுவும் பயன்படாது

(TNPSC A.E - 2013)

1353. ஒரு பகுதியின் மொத்தத்தை கூறுகளாக பிரிக்கும் போது, இதற்கு தகுந்த விளக்கப்படம்

A) கோட்டு படம் B) எளிய விளக்கப்படம்
C) வட்ட விளக்கப்படம் D) பலபட்டைவிளக்கப்படம்

(TNPSC A.E - 2013)

1354. n^3 ஒரு மிகை ஒற்றைப்படை முழு எண் எனில் பின்வருவனவற்றுள் எது ஒற்றை முழு எண் அல்ல

A) $n^2+n^4+n^6$ B) $n+n^2+n^3+n^4$
C) $n+n^3+n^5$ D) $n+n^2+n^3+n^4+n^5$

(TNPSC A.E - 2013)

1355. பின்வரும் எண்களில் எது 99-ஆல் மீதமின்றி வகுபடும்?

A) 135792 B) 114345
C) 913464 D) 3572404

(TNPSC A.E - 2013)

1356. பின்வரும் எண்களில் தனித்த எண்ணைக் காண்.
4, 5, 7, 10, 14, 18, 25, 32

A) 18 B) 7
C) 14 D) 32

(TNPSC A.E - 2013)

1357. Aயும் Bயும் சேர்ந்து ஒரு வேலையை 30 நாட்களில் செய்வர். B மட்டும் அவ்வேலையை 40 நாளில் செய்வார் எனில், A மட்டும் அவ்வேலையை எத்தனை நாளில் செய்வார்?

A) 100 நாட்கள் B) 140 நாட்கள்
C) 120 நாட்கள் D) 180 நாட்கள்

(TNPSC A.E - 2013)

1347 ... D 1348 .... C 1349 ..... D 1350 .... B 1351 ...... B 1352 ..... C 1353 ..... C 1354 .... B 1355 ..... B 1356 ..... A 1357 ... C

1323. (D)

$$= \frac{(0.673)\times(0.673)-(0.327)\times(0.327)}{1.0-0.654}$$

$$= \frac{(0.673)^2-(0.327)^2}{0.346}$$

$$= \frac{(0.673+0.327)(0.673-0.327)}{0.346}$$

$$\left[\because a^2-b^2=(a+b)\times(a-b)\right]$$

$$= \frac{1\times(0.346)}{0.346}=\frac{0.346}{0.346}=1$$

1324. (B)

$$= \frac{x^2+1}{x^4-1}$$

$$= \frac{x^2+1}{(x^2+1)(x^2-1)} = \frac{1}{(x^2-1)}$$

1325. (D)

x - இன் 2% = 40

$\therefore x = \frac{100}{2}\times 40 = 2000$

$x+50 = 2000+50 = 2050$

2% $\text{of } 2050 = \frac{2}{100}\times 2050 = 41\%$

1326. (D)

ஊர்தியின் குறித்த விலை = ரூ.17,000
தள்ளுபடி = ரூ.1700

தள்ளுபடி சதவீதம் = $\frac{1700}{17,000}\times 100$

= 10%

1327. (C)

ஆங்கிலத்தில் 300 மாணவர்களின் சராசரி மதிப்பெண் = 45

$\therefore$ அவர்களின் மொத்த மதிப்பெண் = 300×45

= ரூ 13500

முதல் 100 மாணவர்களின் சராசரி மதிப்பெண் = 70

அவர்களின் மொத்த மதிப்பெண் = 100×70

= 7000

கடைசி 100 மாணவர்களின் சராசரி மதிப்பெண் = 20

அவர்களின் மொத்த மதிப்பெண் = 100×20

= 2000

300 மாணவர்களின் மொத்த மதிப்பெண் = 13500

முதல் மற்றும் கடைசி 200 மாணவர்களின் மொத்த மதிப்பெண் (7000+2000) = 9000

மீதி 100 மாணவர்களின் மதிப்பெண் = 4500

மீதி 100 மாணவர்களின் சராசரி மதிப்பெண் = $\frac{4500}{100}$.

= 45

1330. (C)

மேலே உள்ள முதல் கட்டத்திலிருந்து (A முதல்) கீழே 'O' வரை, உள்ள ஒவ்வொரு எழுத்திற்கும், அடுத்த எழுத்திற்கும் நடுவில் விடுபட்டிருக்கும் எழுத்துகள் நான்காகும். A, F, K, P, U, Z, E, J, O ஆகிய எழுத்துகளுக்கு இடையில் நான்கு நான்காக எழுத்துகள் விடுபட்டுள்ளன. ஆகையால் 'O' விற்கு அடுத்து எழுத்து, நான்கு எழுத்து களை விட்டு 'T' ஆகும்.

1332. (B)

S = {(1,1), (1,2), (1,3), (1,4), (1,5), (1, 6)

(2,1), (2,2) (2,3), (2,4), (2,5), (2,6) ....

(6,1), (6,2), (6,3) (6,4), (6,5), (6,6)}

n(S) = 36

A = கூட்டு எண் 9 கிடைப்பதற்கான நிகழ்வு

= {(4,5), (5,4), (6,3), (3,6)}

n(A) = 4

$$P(A)=\frac{n(A)}{n(S)} = \frac{4}{36}=\frac{1}{9}$$

1333. (A)

இரு பகடைகளையும் எரியும் போது, இரு முகங்களிலும் கிடைக்க வேண்டிய கூடுதல்.

= {2, 3, 4, 5, 6, 8, 9, 10, 12)
A = {(1,1), (1,2), (1,3), (1,4), (1,5)
(2,1), (2,2), (2,3), (2,4), (2,6)
(3,1), (3,2), (3,3), (3,5), (3,6)
(4,1), (4,2), (4,4), (4,5), (4,6)
(5,1), (5,3), (5,4), (5,5)
(6,2), (6,3) (6,4) (6,6)}
n(A)=28, n(S) = 36

$$\therefore P(A) = \frac{n(A)}{n(S)}=\frac{28}{36}=\frac{7}{9}$$

1334. (B)

மொத்த செலவினம் = 100%
மொத்த கோணம் = 360°
நோய் தடுப்புக்கு செய்த செலவு = 108°

நோய் தடுப்புக்கு செய்த செலவு சதவீதம் = $\frac{108}{360}\times 100$ =30%

1335. (D)

S என்ற கணம் 'n' உறுப்புகளைப் பெற்றிருப்பின் S-ன் தகு உட்கணங்களின் எண்ணிக்கை 2^n-1

∴ S-ன் வெற்றற்ற தகு உட்கணங்களின் எண்ணிக்கை

$= 2^n-1-1$

$= 2^n-2$

1336. (C)

4 வருடத்தில் கிடைக்கும் கூடுதல் = ரூ. 840

3 வருடத்தில் கிடைக்கும் கூடுதல் = ரூ. 800

\-------

ரூ.800க்கு ஒரு வருடத்தில் கிடைக்கும் வட்டி = ரூ. 40

\-------

∴ அசல் 'P' = 800

வட்டி = ரூ. 40

வருடம் = 1

வட்டி வீதம் = 'r'

$= \frac{100\,I}{Pn}$

$= \frac{100 \times 40}{800 \times 1}$

$= 5\%$

1337. (C)

மொத்த தூரம் = 600 கி.மீ.

விரைவு வண்டியின் சராசரி வேகம் = 100கி.மீ/மணி

கடக்கும் நேரம் = $\frac{600}{100} = 6$ மணி

ஒவ்வொரு 75 கி.மீக்கும் வண்டி நிற்கும் நேரம் = 3 நிமிடம்

நின்று செல்லும் நிலையங்களின் எண்ணிக்கை = 7



∴ வண்டி மொத்தம் நின்று செல்லும் (பயணிக்கும்) நேரம்

$= 7 \times 3 = 21$ நிமிடங்கள்

மொத்த நேரம் = 6 மணி + 21 நிமிடங்கள்

= 6 மணி 21 நி

1338. (C)

'A' மற்றும் 'B' குழாய்கள் தொட்டியை நிரப்பும் நேரங்கள் முறையே 5 மணி, 6 மணி.

∴ இரண்டும் சேர்ந்து ஒரு மணி நேரத்தில் நிரப்பும் பகுதி $= \frac{1}{5} + \frac{1}{6}$

$= \frac{6+5}{30} = \frac{11}{30}$

அத்தொட்டியை 'C' காலி செய்யும் நேரம் = 12 மணி

∴ ஒரு மணி நேரத்தில் அது செய்யும் வேலை = $\frac{1}{12}$

மூன்று குழாய்களும் ஒரு மணி நேரத்தில் செய்யும் வேலை $= \frac{11}{30} - \frac{1}{12}$

$= \frac{22-5}{60}$

$= \frac{17}{60}$

∴ தொட்டி நிரம்பும் நேரம் $= \frac{60}{17} = 3\frac{9}{17}$

1340. (C)

படத்தில் ஒவ்வொரு வரிசையில் உள்ள கட்டங்களில் இருக்கும் எண்களைக் கூட்டும் போது 19 கிடைக்கிறது.

3 + 6 + 2 + 8 = 19

9 + 4 + 6 = 19

11 + 8 = 19

∴ ஆகையால் இவைகளைப் போல் எல்லாவற்றிற்கும் மேலே உள்ள கட்டத்தில் **19** வர வேண்டும்.

1341. (C)

இரு நேர்க்குத்து வரிசைகளிலும் முதல் இரண்டு குறுக்கு வரிசைக் கட்டங்களில் இருக்கும் எண்களின் வித்தியாசம், அடுத்த வரிசையிலுள்ள இரண்டாவது கட்டத்தில் வரும் எண்ணாகிறது.

முதல் வரிசை = 9 - 5

இரண்டாம் வரிசை = 14 - [4] (9 - 5 = 4)

மூன்றாம் வரிசை = 18 - [10] (14-4 = 10)

நான்காம் வரிசை = 28 - [8] (18-10= 8)

ஐந்தாம் வரிசை = 36 - [20] (28-8 = 20)

∴ ஆறாம் வரிசை = 56 - 16 (36-20 = 16)

இதன்படி ஐந்தாம் வரிசையில் உள்ள எண்களின் வித்தியாசம் (36-20) = 16

∴ ஆகையால் ஆறாம் வரிசையின் இரண்டாவது கட்டத்தில் வர வேண்டிய எண் 16.

1343. (C)

கொடுக்கப்பட்ட புள்ளி விவரங்கள் 30-க்கு மேல் மதிப்பெண் பெற்றவர்கள் = 100 - 65 = 35

1344. (D)

கொடுக்கப்பட்ட விவரங்களின் படி,

ராஜ் < காமேஷ் < சோமேஷ் < ராஜீவ் < சுபாஷ்

ஆகவே சோமேஷ் தான் நடுவில் இருப்பவர்.

1345. (D)

செவ்வகத்தின் நீளம் 'l' மற்றும் அகலம் 'b' என்க.

∴ செவ்வகத்தின் பரப்பு = lb

நீளத்தை 10% அதிகரிக்கும் போது

நீளத்தின் அளவு $= \frac{110}{100} \times l = \frac{11}{10} l$

அகலத்தை 10% குறைக்கும் போது

அகலத்தின் அளவு $= \frac{90}{100} \times b = \frac{9}{10} b$

புதிய செவ்வகத்தின் பரப்பு= $\frac{11}{10}\times l\times\frac{9}{10}\times b = \frac{99}{100}lb$

இரு செவ்வகங்களுக்கும் இடையே உள்ள வித்தியாசம் = $lb-\frac{99}{100}lb$

$= \frac{100lb-99lb}{100}$

$= \frac{1}{100}lb = 1\%lb$

∴ புதிய செவ்வகத்தின் பரப்பு 1% குறையும்

1347. (D)

மொத்த லாபம் = ரூ.75 கோடி

வரி மற்றும் பங்குதாரர்களுக்கு லாப ஈவு செலுத்தியது (15+45) = ரூ.60 கோடி

நிகர லாபம் = ரூ.15 கோடி

∴ லாப சதவீதம் = $\frac{15}{75}\times 100 = 20\%$

1348. (C)

கொடுக்கப்பட்ட விவரங்களின் படி,மொத்த நோயாளிகளின் எண்ணிக்கை = 120+36+44+40

= 240

மொத்த சதவீதம் = 100%

கொழுப்புச்சத்து உள்ள நோயாளிகள்= 36

∴ அவர்களின் சதவீதம் = $\frac{36}{240}\times 100 = 15\%$

1351. (B)

கொடுக்கப்பட்ட விவரங்களின்படி,

250க்கு மேல் உள்ள கண்டறி பதிவு எண்ணிக்கை = 38

300க்கு குறைவான கண்டறி பதிவு எண்ணிக்கை = 15

மீதி = 23

∴ 250-லிருந்து 300க்கும் இடையில் உள்ள கண்டறி பதிவு எண்ணிக்கை = 23

1354. (B)

n = 3 எனக் கொள்க.

A) ∴ $n^2+n^4+n^6 = 3^2+3^4+3^6 = 9+81+729$
$= 819$ ஒற்றை எண்

B) $n+n^2+n^3+n^4 = 3+3^2+3^3+3^4 = 3+9+27+81$
$= 120$ இரட்டை எண்

C) $n+n^3+n^5 = (3)+3^3+3^5 = 3+27+243$
$= 273$ ஒற்றை எண்

D) $n+n^2+n^3+n^4+n^5 = 3+3^2+3^3+3^4+3^5$
$= 3+9+27+81+243$
$= 363$ ஒற்றை எண்

∴ ஒற்றைப்படை முழு எண் அல்லாதது (B)

1355. (B)

ஓர் எண்ணை 99-ஆல் மீதமின்றி வகுக்க வேண்டுமென்றால் முதலில் 9-ஆலும், பின்னர் 11-ஆலும் வகுத்துப் பார்க்க வேண்டும்.

1. ஒரு எண், 9 - ஆல் வகுபட வேண்டுமென்றால் அந்த எண்ணின் இலக்கங்களின் கூடுதல் 9-ன் மடங்காக இருக்க வேண்டும்.
2. ஒரு எண், 11-ஆல் வகுபட வேண்டுமென்றால் அந்த எண்ணின் ஒற்றை இட எண்களின் இலக்கங்களின் கூடுதலுக்கும், இரட்டை இட எண்களின் இலக்கங்களின் கூடுதலுக்கும் உள்ள வித்தியாசம் '0' ஆகவோ அல்லது 11-இன் மடங்காகவோ இருக்க வேண்டும்.

மேற்கண்ட இரண்டு நிபந்தனைகளையும் 114345 என்ற எண் பூர்த்தி செய்கிறது. ஆகவே விடை (B).

1356. (A)

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
4,	5,	7,	10,	14,	18,	25,	32

கொடுக்கப்பட்ட வரிசையில்,

ஒற்றைப்படை வரிசை எண்களில் உள்ள எண்களை இரட்டைப்படை வரிசை எண்களில் உள்ள எண்களிலிருந்து கழிக்கும்போது வித்தியாசம் 1, 2, 3, 4 ....

அதாவது (5-4), (7-5), (10-7), (14-10) என்று வருகின்றன. ஆகையால் அடுத்த எண்களின் வித்தியாசம் 5 ஆக வர வேண்டும். ஆனால் 18-14=4 என்று வருகின்றது. 18-ற்குப் பதில் 19 வர வேண்டும். ஆகவே தனித்த எண் 18.

1357. (C)

A-யும், B-யும் சேர்ந்து வேலையை முடிக்கும் நாட்கள் = 30

∴ அவர்களின் ஒரு நாள் வேலையின் பகுதி = $\frac{1}{30}$

'B' மட்டும் அவ்வேலையை முடிக்கும் நாட்கள் = 40

∴ 'B'யின் ஒரு நாள் வேலைப் பகுதி = $\frac{1}{40}$

'A' மட்டும் அவ்வேலையைச் செய்து முடிக்கக்கூடிய நாட்கள் = $\frac{1}{30}-\frac{1}{40}$

$= \frac{4-3}{120}$

$= \frac{1}{120}$

∴ 'A' மட்டும் அவ்வேலையைச் செய்து முடிக்கும் நாட்கள் = 120